# தமிழ் நாடு அரசு

சுருக்கம்.

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் - மேல்நிலைத் தேர்வு - கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கான விடைத்தாள்களை ஜெராக்ஸ் நகல் எடுத்தல் மற்றும் மறு மதிப்பீடு செய்தல் - கூடுதல் விபரங்கள் உள்ளடக்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (வி1) துறை.

அரசாணை (பல்வகை) எண்.77

நாள்: 7-5-2001.

படிக்க:-

1. அரசாணை (பல்வகை) எண்.8, பள்ளிக் கல்வி, நாள்: 17-1-2001.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடித ந.க.எண்.251417/மே.நி.1/2001, நாள்: 21-2-2001 மற்றும் 26-4-2001.

. . . .

ஆணை:

அரசு மேல்நிலைத் தேர்வு எழுதும் மாணவ/மாணவிகளுக்கு மதிப்பெண் சான்றிதழ் வழங்கியபின் அம்மதிப்பெண்களில் ஐயப்பாடு ஏற்படின் மறு கூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை தற்போது நடைமுறையிலுள்ளது. தற்போதுள்ள இம்முறையோடு, மாணவ/மாணவிகளின் நலன் கருதி கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களின் விடைத்தாள்களை மட்டும் ஜெராக்ஸ் நகல் (Xerox Copy) எடுத்துக் காண்பிக்கவும் மாணவ/மாணவிகளுக்குத் தேவைப்பட்டால் அவ்விடைத்தாள்களை மறு மதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப்படலாமென்றும் அரசு தீர்மானித்து பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2001 ஆம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்வு முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இத்திட்டத்தை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தத் தேவையான பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கி திருத்தியமைத்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

நிபந்தனைகள்.

1. தேர்வு முடிவுகள் வெளியான பிறகு அரசுத் தேர்வுத் துறை நிர்ணயம் செய்யும் தேதிக்குள் குறிப்பிட்ட படிவத்தில் ஜெராக்ஸ் நகல் எடுப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
2. ஜெராக்ஸ் நகல் எடுக்க கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூ.50/-ம் மறுமதிப்பீடு செய்ய கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூ.400/-ம் செலுத்த வேண்டும்.
3. ஜெராக்ஸ் நகலை பார்த்த பிறகும் விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மாணவ/மாணவி விருப்பினால் குறிப்பிட்ட படிவத்தில் அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணமாகிய ரூ.400/-யை செலுத்தி அரசுத் தேர்வு துறையினால் நிர்ணயிக்கப்படும் உரிய தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
4. மறுமதிப்பீடு செய்யும் இடம், காலம், மறு மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களின் விவரங்கள் தெரியப்படுத்தப்படமாட்டாது. மறுமதிப்பீடு செய்த பின்னர் அது குறித்த பதில் மட்டும் மனுதாரருக்கு அனுப்பப்படும்.

. . . . 2

5. மறு மதிப்பீட்டின் போது கூடுதல் மதிப்பெண்கள் இரண்டு வரை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. கூடுதல் மதிப்பெண்கள் மூன்று மற்றும் அதற்கு மேலும் இருந்தால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். இதே போன்று மறு மதிப்பீட்டின் விளைவாக மதிப்பெண்கள் குறைந்தால் அவ்வாறு குறைக்கப்படும் மதிப்பெண்கள் இரண்டு வரை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. மறு மதிப்பீட்டில் குறையும் மதிப்பெண்கள் மூன்றும் அதற்கு மேலும் இருந்தால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் மதிப்பெண்களை குறைத்து திருத்தப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். ஆனால், தேர்ச்சி பெறாமல் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவிகளை பொறுத்தமட்டில் மேலே தெரிவித்துள்ள மதிப்பெண் குறித்த நிபந்தனை பொருந்தாது. தேர்ச்சி பெறாதவர்களுக்கு மறு மதிப்பீட்டின் போது என்ன மதிப்பெண் வருகிறதோ அதன் அடிப்படையில் தேர்வு முடிவு நிர்ணயம் செய்யப்பட்டு தேவைப்படின் திருத்திய மதிப்பெண் சான்று வழங்கப்படும்.

6. மறு கூட்டலுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜெராக்ஸ் நகல் மற்றும் மறு மதிப்பீட்டிற்கும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக கட்டணத்தொகை குறிப்பிட்டபடி செலுத்த வேண்டும். மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தத் தேர்வர்களுக்கு மறுகூட்டல் மூலம் மதிப்பெண் ஒன்றோ அல்லது அதற்கு மேலும் கூடுதலாக வந்தாலும் அவர்கள் ஏற்கனவே பெற்ற மதிப்பெண்களோடு கூடுதலாக சேர்த்து வழங்கப்படும். ஜெராக்ஸ் நகல் பெறுவதற்கு மட்டும் விண்ணப்பிப்போர் இச்சலுகையை பெற முடியாது. இவர்கள் மறுகூட்டல் செய்வதற்கும் விண்ணப்பித்தால்தான் இச்சலுகையை பெற முடியும்.

7. விடைத்தாளின் ஜெராக்ஸ் நகலுக்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவ/மாணவிகள் ஜெராக்ஸ் நகலுக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம். தேவைப்படின் மறுகூட்டலுக்கும் மறு மதிப்பீட்டிற்கும் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலகெடுவிற்குள் தனித்தனியே விண்ணப்பிக்கலாம்.

8. மறு மதிப்பீட்டின்போது விடைத்தாளில் அதிக குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடைத்தாளை திருத்திய ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தேர்வு நடைபெறும் நேரத்தில் ஒழுங்கீனச் செயல்புரிந்த மாணவ/மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள் ஆவர்.

10. மறு மதிப்பீடு செய்து அறிவிக்கும் மதிப்பெண் / முடிவு இறுதியானது. அதனை எதிர்த்து / மறு பரிசீலனை கோரி மனு செய்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. ஜெராக்ஸ் நகல், மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு சம்பந்தமான விண்ணப்பங்கள் பெறும் முறைகள், அதற்கான மாதிரி விண்ணப்ப படிவம் இவ்வரசாணையில் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. கௌரிசங்கர்,
அரசு செயலாளர்.

பெறுநர்: 1. அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
2. சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை-35.
3. மாநிலக் கணக்காயர், சென்னை-18.
4. மாநிலக் கணக்காயர், சென்னை-35.
5. கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை-15.

நகல்: கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

- ஒம் -
பிரிவு அலுவலர்.

/உண்மை நகல்/

[illegible]

# பிற்சேர்க்கை

**மேல்நிலைப் பொதுத் தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் போன்ற பாடங்களின் விடைத்தாள்களை ஜெராக்ஸ் எடுத்தல் மற்றும் மறுமதிப்பீட்டு செய்வது குறித்து தேர்வுத் துறையின் நெறிமுறைகள்.**

## விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும் முறை:

இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய நான்கு பாடங்களில் மாணவர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள் நகல் வழங்குதல் மறுகூட்டல், செய்தல், மறுமதிப்பீடு மேற்கொள்ளுதல் ஆகியன தொடர்பாக ஒவ்வொன்றிற்கும் விண்ணப்ப படிவங்கள் தனித்தனியே அச்சடிக்கப்பட்டு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் விருப்பமுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## விண்ணப்பங்கள் வழங்கும் முறை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளுதல் குறித்த விவரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன.

1. விண்ணப்பங்கள் சென்னை மாநகரத்தை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் (Chief Educational Officers' Office) மாவட்டக் கல்வி அலுவலர்களின் (District Educational Officers' Office) அலுவலகம் ஆகியவற்றின் மூலம் விநியோகம் செய்யப்படும்.

2. மேலும் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை, கடலூர், வேலூர் ஆகிய ஆறு இடங்களில் செயல்படும் மண்டல அரசுத் தேர்வுகள் துணை இயக்குநர் அலுவலகங்கள் மூலமாகவும் விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்படும்.

3. சென்னை மாநகரத்தை பொறுத்தமட்டில் தேர்வுத் துறை தேர்ந்தெடுக்கும் சில மேல்நிலைப் பள்ளிகள் மூலம் விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்படும். இது பற்றி அரசு தேர்வுத் துறை அறிவிப்பு செய்யும்.

இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எம். ஏ. கௌரிசங்கர்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

—ஒப்பம்—
பிரிவு அலுவலர்.